පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
| --- |
| 08 |

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

பாடசாலையின் பெயர் : ........................................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........................................................................

.......................................................................................................... நேரம் : 02 மணித்தியாலம்

குடியியற் கல்வி
பகுதி I

Education NCP - www.edncp.lk

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
❖ **01 – 05 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. இலங்கையில் கிராமியப் பிரதேசங்களுக்கான விஷேட போக்குவரத்துச் சேவை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
   1. மக நகம 2. விதாதா
   3. சிசு சரிய 4. கெமி செரிய

02. சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாக அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனம் அல்லாதது
   1. இலங்கைப் புகையிரதத் திணைக்களம்
   2. வன ஜீவராசிகள் திணைக்களம்
   3. வனப் பாதுகாப்புத் திணைக்களம்
   4. சுற்றாடல் அமைச்சு

03. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சாசனத்திற்கு அமைய எத்தனை வயதிற்குக் குறைந்தோர் சிறுவர்கள் என ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்?
   1. 6 வயதுக்குக் குறைந்தோர் 2. 18 வயதுக்குக் குறைந்தோர்
   3. 5 வயதுக்குக் குறைந்தோர் 4. 14 வயதுக்குக் குறைந்தோர்

04. பல் பண்பாட்டுச் சமூகத்தின் பண்புகளில் அடங்காதது
   1. பல்வேறு சமூக அமைப்பு 2. பல்வேறு மொழிகள் பேசுதல்
   3. பல்வேறு அரசாங்கங்கள் 4. பல்வேறு சமய நடவடிக்கைகள்

05. பின்வருவனவற்றுள் மனித நடவடிக்கைகள் காரணமாக உண்டாகும் அனர்த்தமாகக் கருதக்கூடியது
   1. மின்னல் 2. வெள்ளப்பெருக்கு
   3. நில நடுக்கம் 4. வாகன விபத்து

❖ **06 – 10 வரையிலான வினாக்களுக்கு சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

06. உலகிலுள்ள பல் பண்பாட்டுச் சமூகங்களைக் கொண்ட நாடுகளில் இந்தியா சிறப்பான இடத்தினை வகிக்கின்றது. (      )
07. அனுராதபுர யுகத்தைச் சேர்ந்த புத்ததாச மன்னனின் காலத்தில் பத்து கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் நியமிக்கப்பட்டிருந்ததாக அறிய முடிகிறது. (      )

08. வீட்டில் நிலவும் சுதந்திரமானதும், அமைதியானதுமான சூழல் உங்களது திறன்கள் வளர்ச்சியடைவதற்குத் துணையாக அமைவதில்லை. (      )

09. மாற்றுக் கருத்துக்களை சகித்துக் கொள்ளல் ஜனநாயக வாழ்வுடன் தொடர்புடைய பண்புகளுள் ஒன்றாகும். (      )

10. இலங்கையில் ரெலிகொம் நிறுவனம் மாத்திரமே தொலைத் தொடர்பு சேவையை வழங்குகின்றது. (      )

❖ **தரப்பட்ட சொற்களுள் பொருத்தமான சொற்களைக் கொண்டு 11 - 15 வரையிலான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.**

| | | | | |
|---|---|---|---|---|
| **பல்வேறு,** | **தொடர்புகளை,** | **சுதந்திரம்,** | **மனவெழுச்சி,** | **முரண்பாடுகள்** |

11. பாதகமான ______________________ நிலமைகள் தொடர்ந்தும் காணப்படுவதன் மூலம் தனிநபர்கள் உடல், உள, சமூக ரீதியாகப் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

12. சமகால சமூகத்தில் நபர்களுக்கிடையில் பல்வேறு ______________________, கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதைக் காணலாம்.

13. ஐக்கிய அமெரிக்காவில் ______________________ இன, மொழி, சமயம் என்பவற்றைச் சேர்ந்த ஏராளமான மக்கள் வாழ்கின்றனர்.

14. தொடர்பாடல் ஊடகங்களுடன் ______________________ ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் விபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெற்று அவதானத்துடன் இருக்கலாம்.

15. சமய நம்பிக்கைகளைப் பெறுவதற்கான ______________________ சிறுவர் உரிமைகளுள் ஒன்றாகும்.

❖ **16 – 20 வரையான வினாக்களில் "அ" பகுதியில் உள்ளவற்றிற்குப் பொருத்தமானவற்றை "ஆ" பகுதியிலிருந்து தொடர்புபடுத்துக.**

| | "அ" | "ஆ" |
|---|---|---|
| 16. | நோயாளிக்குச் சிகிச்சையளித்தல் | சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் |
| 17. | காசுக் கட்டளை முறையில் பணம் அனுப்புதல் | பௌத்த கலாச்சாரம் |
| 18. | மகா சிவராத்திரி | சுகாதார சேவை |
| 19. | சிறுவர் உரிமை | இந்துக் கலாச்சாரம் |
| 20. | எசல வைபவம் | அஞ்சற் சேவை |

(20 × 2 = 40 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

(01) 1. நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொதுச் சேவை மூன்றைக் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

2. கல்வி மூலம் ஆற்றப்படும் பணிகள் நான்கைக் குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)

3. பயணிகள் போக்குவரத்திற்காக சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக?
(03 புள்ளிகள்)

4. பொலிஸ் நிலையமொன்றில் பணியாற்றும் பணியாளர்களுள் இரண்டு அதிகாரிகளைக் குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)

(02) 1. தலைவர்களிடம் காணப்பட வேண்டிய பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2. சகல சிறுவர்களுக்கும் உரித்தான உரிமைகளை பிரதான நான்கு தலைப்புக்களின் கீழ் வகுக்கப்பட்டுள்ளன. அந்நான்கு உரிமைகளை எழுதுக. (04 புள்ளிகள்)

3. ஜனநாயக ரீதியான தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் ஐந்து எழுதுக.
(05 புள்ளிகள்)

(03) 1. குடும்பத்தில் காணப்படும் ஜனநாயகப் பண்புகள் நான்கினை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

2. பின்வரும் மனவெழுச்சிகளின் விளைவுகள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

i. மகிழ்ச்சி :- ______________________
ii. பயம் :- ______________________
iii. கோபம் :- ______________________
iv. துக்கம் :- ______________________
(04 புள்ளிகள்)

3. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள சிறுவர் உரிமைகளோடு தொடர்புடைய கடமைகள் ஒவ்வொன்றை அருகில் எழுதுக.

| **சிறுவர் உரிமைகள்** | **சிறுவர் கடமைகள்** |
|---|---|
| கல்வி பெறல் | |
| நட்புறவைப் பேணுதல் | |
| சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் | |
| சமூகப் பாதுகாப்பின் மூலம் பயன்களைப் பெறல் | |

(04 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

(04) 1. பல்பாண்பாட்டுச் சமூகங்களைக் கொண்ட நாடுகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

2. i. கிறிஸ்தவ சமயப் பண்டிகை இரண்டினை எழுதுக. (02 புள்ளிகள்)

ii. இந்து சமயத்தோடு தொடர்புடைய கலாச்சார நிகழ்வுகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

3. பன்மைப் பண்பாட்டுச் சமூக அமைப்பினைக் கொண்டுள்ள ஐக்கிய அமெரிக்காவிலுள்ள மாநிலங்கள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(05) 1. பல்கலாசார பண்பாட்டுத் தன்மையை கொண்டுள்ள இந்தியாவில் பயன்பாட்டிலுள்ள மொழிகள் நான்கினை எழுதுக. (04 புள்ளிகள்)

2. இலங்கையில் கலாசாரப் பல்வகைமை காணப்படுகின்றது. அப்பண்பாடுகளுடன் தொடர்புடைய தலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3. இந்தியாவின் பன்மைச் சமூக அமைப்பில் காணப்படும் நான்கு இனங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(06) 1. வெள்ளப்பெருக்கால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் நான்கு எழுதுக. (04 புள்ளிகள்)

2. இடி, மின்னல் தாக்குதல்களால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முறைகள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3. வரட்சியிலிருந்து பாதுகாப்புப் பெறும் வழிமுறைகள் நான்கினை எழுதுக. (04 புள்ளிகள்)

(07) 1. வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு சாரதிகளினால் பின்பற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் நான்கு எழுதுக. (04 புள்ளிகள்)

2. இரசாயனப் பொருட்கள் உடலினுள் செல்லும் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3. உணவு நஞ்சடைவதற்கான காரணங்கள் நான்கு எழுதுக. (04 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk
PAST PAPERS WIKI

விடைகள்

தரம் - 08

குடியியற் கல்வி

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

**பகுதி – I**

| | | | |
|---|---|---|---|
| 01) 4 | 02) 1 | 03) 2 | 04) 3 |
| 05) 4 | 06) √ | 07) √ | 08) × |
| 09) √ | 10) × | 11) மனவெழுச்சி | 12) முரண்பாடுகள் |
| 13) பல்வேறு | 14) தொடர்புகளை | 15) சுதந்திரம் | 16) சுகாதார சேவை |
| 17) அஞ்சற் சேவை | 18) இந்துக் கலாசாரம் | 19) சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் | 20) பௌத்த கலாச்சாரம் |

( 2 × 20 = 40 புள்ளிகள்)



PAST PAPERS WIKI


LOL.lk
Learn Ordinary Level
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
පසුගිය විභාග ප්‍රශ්න පත්‍ර
G.C.E. O/L
විද්‍යාව
A9+
ඉංග්‍රීසි භාෂාව
ENGLISH LANGUAGE
GUIDE PAST PAPERS
සිංහල
G.C.E. O/L SINHALA
General English
• Past Papers • Model Papers • Resource Books
for G.C.E O/L and A/L Exams
සමනල දැනුම
විභාග ඉලක්ක ජයගන්න
Knowledge Bank
Master Guide
WWW.LOL.LK
CASH ON DELIVERY
HOME DELIVERY
Whatsapp contact
+94 71 777 4440
Website
www.lol.lk
Order via WhatsApp
071 777 4440